ஸ்ரீ:

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

ஸ்ரீகாஞ்சீ ப்ரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசாரியர் ஸ்வாமியின்

காள்யுக்தி வஸ்ஷத்திய

மீன விசாகோத்ஸவப் பத்திரிகை

ஸ்ரீஸ்வாமியின் எண்பத்தெட்டாவது திருநக்ஷத்திர பூர்த்தியை முன்னிட்டு

ஸ்ரீ காஞ்சியில் ஸ்வாமியின் திருமாளிகையில்

நாளது மாசிமீ 25௳ (9—3—79) வெள்ளிக்கிழமை முதல்
பங்குனிமீ 4௳ (18—3—79) ஞாயிற்றுக்கிழமை

வேதபாராயணம், திவ்யப்ரபந்தஸேவை, ரஹஸ்யாநுஸந்தாநம், ஸ்தோத்ரபாடம், வித்வான்களின் உபந்யாஸம் இவை நடைபெறும் ஆப்தர்கள் அனைவரும் கூடியிருந்து சிறப்பாக நடக்கும்படி பிரார்த்திக்கப்படுகிறார்கள்.

இங்ஙனம்,

காஞ்சீபுரம்,
1—3—79

ப்ரதிவாதிபயங்கரம் **செல்வமணி** என்கிற
ரங்கநாத தாஸன்.

கடந்தஆறு மீனவிசாக நிகழ்ச்சிக்கு அபிமானிகளின் அன்பளிப்பு

		ரூ.
ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி திருக்குறுங்குடி ஜீயர் ஸ்வாமி		25
ஸ்ரீமத் பரமஹம்ஸ திருமலை திருப்பதி சின்ன ஜீயர் ஸ்வாமி		101
ஸ்ரீமத் பரமஹம்ஸ ஸ்ரீ வில்லிபுத்தூர் மணவாள மாமுனிகள் ஜீயர்		10
ஸ்ரீமத் பரமஹம்ஸ ஸ்ரீமன் நாராயண ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி		101
ஸ்ரீமான் M, ரங்கசாமி ஐயங்கார்	சென்னை	101
A. ஸ்ரீனிவாச ஐயங்கார்	,,	101
A. V. கன்னைய நாயுடு	,,	101
T. S. திருமலாசாரியர்	,,	25
A, K. சடகோபாசாரியர்	,,	50
ஸ்ரீ K V. நரஸிம்ஹன் (Auditor) வகையறுக்கள்	சென்னை	167
ஸ்வாமியர் B. ஸத்யமூர்த்தி ஐயங்கார் ஸ்வாமி	,,	20
C. கிருஷ்ண ஸ்வாமி நுங்கம்பாக்கம்	,,	20
G. V. லக்ஷ்மீ நாராயணன்	,,	25
T. A. திருவேங்கடாசாரியர்	,,	10
K. M. ராமாநுஜ ஐயங்கார்	,,	11
M ஏகாம்பர முதலியார்	,,	21
V. N. தேவநாதன்	,,	15
V. C. ரங்கதுரை	சென்னை	50
G: V. லக்ஷ்மீவராஹன்	,,	10

ஸ்ரீமான்கள்	ரூ
தேசூர் ஸ்ரீநிவாஸ வரதாசாரியர் ..	25
K. S. பார்த்தஸாரதி ஐயங்கார் ..	100
R. V. சேஷாத்ரி ஸ்வாமி B. A., B. L..	25
A. ராமஸ்வாமி நாயுடு ..	25
நாராயணக்கோனார் ..	100
அண்ணாமலை நாடார் ..	50
P. V. பாண்டுரங்கம் செட்டி ..	25
சக்ரபாணி செட்டியார் சைதை ..	15
சென்னை P. G. மாணிக்க செட்டியார் ..	10
தேவராஜுலு நாயுடு ..	100
டாக்டர் வெங்கடக்ருஷ்ணய்யர்	15
(அகரம்) R. வரதன்	100
M. A. க்ருஷ்ணம்மா	100
R. வரதராஜ ஐயங்கார், ஸ்ரீரங்கம்	25
T. ராமாநுஜ ஐயங்கார், பேராசிரியர், தஞ்சை	20
A. சீதாராமன், அசோகநகர்	30
N. வேணுகோபால நாயகர்	5
ரங்கநாயகி கொருக்குப்பேட்டை	15
(Late) K. திருவெங்கடாசாரி Son ஸம்பத்	15
திருவாலவட்டம் துரைசாமி	5
S. அப்பன் ஐயங்கார் (அச்சந்தவிழ்த்தான்)	10
S. R. ஸ்ரீநிவாஸய்யங்கார் திருவல்லிக்கேணி	10
P. A. ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி காஞ்சி	75
திண்டுக்கல் ராஜகோபாலன்	100
.. தோப்பு ராமராமானுஜர்	30
Dr. N. ஸ்ரீநிவாஸன்	20
N. P. ஸ்ரீரங்காசாரியர்	5
அச்சிறுவாக்கம் முனுசாமி ரெட்டியார்	15
M. செல்லபெருமாள் கோனார் மதுரை	30
முத்துராமரெட்டியார் ராதாபுரம்	25
ஸ்ரீமான் பாலக்ருஷ்ண பிள்ளை இளையாண்டபட்டு	25
K. P. சந்த்ரஹாஸன், ஈரோடு	5
C. வெங்கடாசலம் ..	5
V. எதிராஜன் ..	5

ஸ்ரீமான்கள்	ரூ
ஜலகண்டபுரம் நாகப்பன் பொன்னுடைகளும் பொற்காணிக்கைகளும்	
காரைக்குடி T. R. ராகவ ஐயங்கார் டிரஸ்ட்	10
களம்பூர் ராமநாதன் செட்டியார்	87
K. V. ராஜகோபாலன் Son குத்தாலம்	50
மீஞ்சூர் வரதாசாரியர் ஆவடி	15
T. பார்த்தஸாரதி ஐயங்கார் காஞ்சி	10
A. ஸ்ரீநிவாச ஐயங்கார் மன்னார்குடி	25
மண்டகப்பட்டு தேவநாதாசாரியர்	5
R. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் நேமத்தான் பட்டி	30
T. V. G. ஆச்சார்ய ஒரிஸ்ஸா	105
T. V. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் பேராவூரணி	5
ராதாபுரம் ரங்காரெட்டி	
R. ஜகந்நாத ஐயங்கார் பாண்டிச்சேரி	11
சேதுராம செட்டியார் ..	100
ஸ்ரீவைஷ்ணவரத்னம் D. K. ராஜு ராஜபாளையம்	250
S. T. சடகோபாசாரியர் ராமநாதபுரம்	10
கரியமாணிக்கம் ராதாகிருஷ்ணன்	10
சேரங்குளம் K. R. ராஜகோபால ஐயங்கார் (பட்டு ராஜம்)	10
காஞ்சீபூர்ண செட்டியார் சேலம்	10
R. பார்த்தசாரதி ஐயங்கார் ஸ்ரீவில்லிபுத்தூர்	5
தேவநாத் ஐயங்கார் செகிந்திராபாத்	20
தென்திருப்பேரை மகரபூஷணமையங்கார்	20
திருமாணிக்குழி லக்ஷ்மீ நாராயணன்	25
திருப்பத்தூர் காளியப்ப முதலியார்	50
.. ஷண்முக முதலியார்	50
திருச்சி சுந்தரராஜன் செட்டியார்	50
தூத்துக்குடி கோவிந்தசாமி	31
விட்டலாபுரம் வெங்கடாசாரியர்	5
விக்ரவாண்டி திருநாராயணபாகவதர்	25
T. S. வாஸன் மதராஸ்	10
ஸ்ரீபாத தீர்த்த ஸம்பாவனை	160

—X—

ஸ்ரீமதே ராமாநுஜாய நம :

கீழ்த்திருப்பதி சிறிய ஜீயர்ஸ்வாமி மடத்தின் சிலாசாஸநத் திறப்பு விழா

(திருமலை அனந்தாண்பிள்ளை குன்றபாக்கம் நியாய வேதாந்த வித்வான்
சிரோமணி கிருஷ்ணமாசாரியர்)

கீழ்த் திருப்பதியில் உள்ள சிறிய ஜீயர்ஸ்வாமி மடம் ஸ்ரீமத் பரமஹம்ஸபரிவ்ராஜகாசார்யரான இளைய கோவில்கேள்வி அப்பன் கோவிந்த ராமாநுஜ (வர்த்தமாந சிறிய) ஜீயர்ஸ்வாமிகளால் இரண்டு லக்ஷ ரூபாய்ச் செலவில் ஜீர்ணோத்தாரணம் செய்யப் பெற்று, நடந்த நள ௵ கார்த்திகை ௴ 21௳ (6-12-77)ல் ஸம்ப்ரோக்ஷணமும் நடைபெற்ற விஷயம் அனைவரும் அறிந்ததே. அச்சமயம் நம் பிள்ளையின் திருவவதாரோத்ஸவம் நடந்து கொண்டிருந்தபடியினால், ஜகதாசார்ய ஸிம்ஹாஸநாதீச்வர - பத்ம விபூஷண - மஹாவித்வான் - ஸ்ரீ உ. வே. காஞ்சீ ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமிகள் ஷை ஸம்ப்ரோக்ஷணத்திற்கு எழுந்தருள முடியாமற் போகவே, அந்த ஸ்வாமிகளை எப்படியாவது மடத்தில் பொன்னடி சாத்தச் செய்யவேணுமென்று ஸ்ரீ சிறிய ஜீயர் ஸ்வாமிக்கிருந்த பாரிப்பே இச் சிலாசாஸநத் திறப்பு விழாவாகப் பரிணமித்ததென்னலாம்.



ஸ்ரீ ஜீயர்ஸ்வாமியின் ப்ரார்த்தனைக் கிணங்கிய ஸ்ரீ காஞ்சீ ஸ்வாமி, நிகழும் காளயுக்தி ௵ தை௴ 12௳ (25-1-79) வியாழக்கிழமை காஞ்சியிலிருந்து எழுந்தருள, ஸ்ரீ ஜீயர்ஸ்வாமியும் அவர்தமச்கு அந்தரங்கர்களும் பூர்ணகும்பத்துடன் அவரை வரவேற்றனர். பகல் மூன்று மணிக்கு ஷை மடத்தின் வாசலிற் பதிக்கப் பெற்றிருந்த தமிழ் - தெலுங்கு சிலாசாஸநங்களை ஸ்ரீ காஞ்சீ ஸ்வாமி திறந்து வைத்தருளினர். பின்பு ஸ்ரீவைஷ்ணவர்கள் குழுமியிருந்த ஷை மடத்தின் பெருமாள் ஸந்நிதிக்கூடத்தில், ஸ்ரீமான் தி. அ. கோபாலாசாரியர் மங்கள ச்லோகங்களை இசையுடன் அநுஸந்திக்கவும், அடி-

யேன் ஸ்ரீ காஞ்சீ ஸ்வாமிக்கும் மற்ற ஸபையிலுள்ளோர்க்கும் நல்வரவு கூறவும் ஸபை ஆரம்பமாயிற்று.

அதன் பிறகு ஸ்ரீ காஞ்சீ ஸ்வாமி - க்ருபை என்பது ஸஹேதுகமா நிர்ஹேதுகமா என்ற விசாரம் இன்றோடு தொலைந்து அது நிர்ஹேதுகந்தான் என்று தீர்ந்து விட்டது. ஸ்ரீ சிறிய ஜீயர்ஸ்வாமி அடியேனை வரவழைத்து இக்கைங்கர்யத்தில் அந்வயிக்கச் செய்த க்ருபையே இவ்வர்த்தத்தை நிலை நாட்டவல்லது என்று, தம்முடைய விநயமெல்லாம் தோன்றப் பேசத் தொடங்கி ஸ்ரீபாஷ்ய மங்கள ச்லோகத்தின் விவரண ரூபமான மதுரதமோப ந்யாஸத்தைச் செய்தருளினர். அதில் முதன் முதலாக, ச்ருதப்ரகாசிகாவ்யாக் யானத்தை யநுஸரித்து, அகிலபுவநஜந்மேத்யாதியான ஸ்ரீ பாஷ்ய மங்களச் லோகம் எம்பெருமானைப் பற்றியதென்றும், அது தன்னில், மேல் நான்கு அத்யாயங்களிலும் விரிவாகக் கூறப்படும் ''காரணத்வம் அபாத்யத்வம் உபாயத்வம் உபேயதா'' என்னும் நான்கு முக்யார்த்தங்களும் சுருக்கமாகக் காட்டப்பட்டுள்ளன வென்றும் மிக விளக்கமாக நிரூபித்துக் காட்டி, இந்த ச்லோகம் எம் பெருமானைப் பற்றியதென்பது மேலெழுந்தாற்போல் தோன்றி னும் ஊன்றி நோக்கினல் இது நம்மாழ்வாரைப்பற்றிய தென்பது ஸித்தாந்தமாகத் தடையில்லை. மாறனடிபணிந் துய்ந்தவரான எம்பெருமானர் ''பாஷ்யகாரர் இது




கொண்டு ஸூத்ரவாக்யங்கள் ஒருங்கவிடுவர்'' என்னும் ஆசார்யஹ்ருதய ஸ்ரீஸூக்தியின்படியே, ஸ்ரீபாஷ்யம் பண்ணியருளும்போது ஸூத்ரவாக்யங் களில் ஸந்திக்தங்களான அர்த்தங்களையெல்லாம் ஆழ்வாருடைய திருவாய் மொழியைக் கொண்டு நிர்ணயித்து ஒருங்கவிட்டருளுமவராகையால், தமக்கு உபஜீவ்யமான திருவாய்மொழியை அருளிய நம்மாழ்வாரைக் குறித்தே ஸூத்ரவ்யாக்யானமான ஸ்ரீ பாஷ்யத்தின் தொடக்கத்தில் மங்களச்லோகம் ஸாதித்திருப்பரென்று அறுதியிடுவது யுக்தமே யன்றோ? ஆக இந்த ச்லோகம் நம்மாழ்வாரைப்பற்றி எழுந்ததேயாகுமென்று ப்ரதிஜ்ஞை செய்து, அதி லுள்ள ஸப்தம்யந்தமான எல்லாப் பதங்களையும் நம்மாழ்வாரிடத்தில் அழகாகப் பொருத்திக் காட்டினர். அதன் சுருக்கம் வருமாறு :

இதில் முதல்பதம் ஆழ்வாரிடம் அந்வயிக்கும் போது, (1) அகிலம் புவநஜந்மஸ்தேமபங்காதிலீல : யஸ்ய என்றும் (2) அகிலபுவந

ஜந்மஸ்தேமபங்காதிநா லீலா யஸ்ய என்றும்- இவ்விரண்டு வ்யுத்பத்தியையும் பெறும். (1) ''வாஸுதேவஸ் ஸர்வம்'' என்கிறபடியே, உலகின் ஆக்கம் அளிப்பு அழிப்பு முதலியவற்றை இன்புறும் விளையாட்டாகவுடைய எம்பெருமானையே அகிலமாக = உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன்'' என்று தாம் அருளிச் செய்தபடியே தாரகபோஷக போக்யங்களெல்லாமாகக் கொண்டவர் என்ற முதற் பொருளும், (2) எல்லாவுலகின் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களுக்கு ஆதியான (காரணனை) எம்பெருமானோடு ''என்னுடைய பந்தும் கழலும் தந்து போகு நம்பீ'' என்றிப்படிகளிலே விளையாடுமவர் என்ற இரண்டாம் பொருளும் நம்மாழ்வாரிடம் நன்கு பொருந்தும். இனி இரண்டாம் பாதமான, நன்கு வணங்கும் பல்வகை அதிகாரிகளின் திரளைக் காப்பதில் ஒப்பற்ற விரதமுடையவர் என்னும் பொருள்பட்டு நிற்கும் ''விநதவிவித பூதவ்ராதரக்ஷைக தீக்ஷே'' என்பது, ''ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே'' என்று எல்லோரும் சரணமாக (நிரபேக்ஷோபாயமாகப்) பற்றுவது எம்பெருமானுடைய திருவடிகளேயாகையாலும் அத்திருவடிகளே நம்மாழ்வாராகையாலும், ஆழ்வாரிடம் பொருந்தக் குறையில்லை. மூன்றும் விசேஷணம் ''ச்ருதி சிரஸி விதீப்தே'' என்பது. மறைமுடியில் மிக விளங்குமவர் என்று பொருள்படும் அது. ''தத்விப்ராஸோ விபந்யவோ ஜாக்ருவாம்ஸ: ஸமிந்ததே'' என்கிற மறைமுடி (வேதாந்த) வாக்யத்தில் ஆழ்வார் விளங்குகின்றமை காண்மின். விப்ராஸ :-விப்ரா : என்றபடி. ''ந சூத்ரா பகவத் பக்தா : விப்ரா : பாகவதா : ஸ்ம்ருதா :'' என்ற ப்ரமாணத்தின்படி அத்யந்த பகவத் பக்தரான ஆழ்வார் விப்ரரேயென்னத் தட்டில்லை. ஆத்மாநம் லோகாந்ச விசேஷேண பாபேப்ய: பாதி (= தம்மையும் உலகோரையும் பாபங்களினின்றும் மிகவும் விடுவிக்குமவர்) என்ற வ்யுத்பத்தியுடைய இச்சொல் ஆழ்வாரிடம் அந்வயிப்பதில் ஐயமேதுமில்லை. விசேஷேண பணயந்தே என்ற வ்யுத்பத்தியைப் பெற்ற விபந்யவ : என்ற பதம் எம்பெருமானை விசேஷமாகத் துதிப்பவர் என்றும் பொருள் படும். இப்பொருள் - 'நண்ணாவசுரர் நலிவெய்தவும் நல்லவமரர் பொலிவெய்தவும் எண்ணாதனகளெண்ணும் நன்முனிவர் இன்பம் தலைசிறப்பவும் (= நன்முனிவர் இன்பம் தலைசிறந்து எண்ணாதனகளெண்ணவும்) எம்பெருமானைப் பாடித்



துதித்த நம்மாழ்வாரிடம் பொருந்தாமை யில்லை. ஜாக்ருவாம்ஸ :=விழித்திருப்பவர் என்னும் பொருளுடைய இச்சொல் "கண்ணுறக்கண்டு கழிவதோர் காதலுற்றார்க்கும் உண்டோ கண்கள் துஞ்சுதலே" என்று தாம் அருளிய படியே எப்போதும் தூக்கமின்றி விழித்திருக்கும் ஆழ்வாரிடம் அமைந்துள்ளது. இங்ஙனம் விப்ரராகவும் விபந்யுவாகவும் விநித்ரராகவும், ஸமிந்ததே=விளங்குகிறார் ஆழ்வார் என்று கூறும் வேதாந்த வாக்யத்தில் விளங்குகின்றமை ஆழ்வார் பக்கல் கண்டோம். ச்ருதியில் ஸமிந்ததே என்ற தன் பொருளையே எம்பெருமானார் இங்கு விதீப்தே என்று மொழி பெயர்த்தருளினர். (=ஸம் என்பதற்கு விவரணம் வி என்பது, இந்தீதாதுவின் விளக்கம் தீப்தே என்பது.) ஸ்ரீநிவாஸே என்ற விசேஷணம் ஸம்பத்துக்கு இருப்பிடமானவர் என்று பொருள்பட்டு நிற்கும், இராவணன் திரஸ்கரிக்க, நிற்க இடமுமில்லாமல் ஆகாசத்தில் நிற்கும் விபீஷணாழ்வானை 'அந்தரிக்ஷகத: ஸ்ரீமான்' என்று கூறிய வால்மீகி பகவான் இராமபிரானோடு சேர வேணுமென்ற பாரிப்பையே ஸ்ரீசப்தத்தால்குறித்தனர். நாட்டையும் மனைவியையும் விட்டு மண்வெட்டியும் கூடையும் கொண்டு இராமபிரான் பின் சென்ற இளைய பெருமாளைப் பற்றி "லக்ஷ்மணோ லக்ஷ்மி ஸம்பந்ந ;" என்று சொல்லிய அம்முனிவரர், இராமபிரானோடு சென்று அவர்தமக்குக் கைங்கர்யம் செய்ய வேணுமென்ற பாரிப்பையேயன்றோ



லக்ஷ்மீ சப்தத்தினால் குறித்திருக்கிறார். அங்ஙனமே முதலைவாயில் அகப்பட்டுத் துடிக்கும் கஜேந்த்ராழ்வான், விஷ்ணு தர்மத்தில் "ஸது நாகவர : ஸ்ரீமான்" என்று ஸ்ரீமானைக் குறிக்கப் பெற்றமைக்குக் காரணம்—பறித்த பூவைத் திருவடியில் பணிமாறவேணுமென்ற கைங்கரியப் பாரிப்பேயன்றோ? அங்ஙனமே ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னி வழுவிலாவடிமை செய்ய வேண்டும் என்று பாரித்த நம்மாழ்வாரிடம் ஸ்ரீநிவாஸத்வம் சாலப் பொருந்தும். ப்ராப்யர் என்ற பொருளுடைய பரஸ்மிந் என்னும் விசேஷணமும் ப்ராப்யத்திற்கு எல்லை நிலமான ஆழ்வாரிடம் அழகாக அமைந்ததேயாகும். இதுவரையில் ஐந்து விசேஷணங்களின் பொருத்தம் அனுபவிக்கப்பட்டது. இனி ப்ரஹ்மணி என்னும் விசேஷ்யபதம் ஆழ்வாரைக் குறிக்குமழகு கேண்மின். ப்ரஹ்ம என்பதற்கு மிகப் பெரிய பொருள் என்று அர்த்தம். உண்மையில் "மஹதோ மஹீயாந்" என்னப்பட்ட பரம்பொருள் ஒன்றே மிகப் பெரிய பொருளாகும். இங்ஙனம் இருக்க,

"புவியுமிருவிசும்பும் நின்னகத்த, நீ என்
செவியின் வழிபுகுந்தென்னுள்ளாய்;—அவிவின்றி
யான் பெரியன், நீ பெரியை யென்பதனை யாரறிவார்,
ஊன்பருகு நேமியாய் உள்ளு"

என்ற பெரிய திருவந்தாதிப் பாசுரத்தில் ஆழ்வார், உபய விபூதி யுக்தனுய் மிகப் பெரியவனை எம்பெருமானையும் தம் காது வழியாக உள்ளே புகுத்தி அங்கேயே அவனை யிருத்திக் கொண்டிருக்கும் தம்மையே அவனைக் காட்டிலும் மிகப் பெரியவராகக் கூறி அசைக்க முடியாமல் ஸ்தாபித்தருளினராகையால் ப்ரஹ்மணி என்ற விசேஷ்யம் ஆழ்வாரைக் குறித்தல் மிகவும் ஸ்வரஸமாகும், இப்படிப்பட்ட நம்மாழ்வாரிடத்தில் "பவது மம சேமுஷீ பக்திரூபா" என்று-பக்தி ரூபமான ஜ்ஞாநமானது தமக்கு உண்டாக வேணுமென்று ப்ரார்த்திக்கிருர் எம்பெருமானுர். எம்பெருமானுடைய நிர்ஹேதுக க்ருபையினுல்; "மதிநல மருளினன்" என்கிறபடியே அப்பெருமானிடம் நலமான மதியை பக்திரூபமான ஜ்ஞானத்தை ஆழ்வார் பெற்றது போல, ஆழ்வாருடைய நிர்ஹேதுகக்ருபையினுல் அவர் தம்மிடம் நலமான மதியை எம்பெருமானுர் பெற ஆசைப்படுகிருர். (இது காஞ்சீ ஸ்வாமியின் உபந்யாஸச் சுருக்கம்.)



இவ்வாறு உபந்யஸித்தருளிய ஸ்ரீ காஞ்சீ ஸ்வாமி மறுபடியும் ஸ்ரீஜீயர் ஸ்வாமி திறத்தில் நன்றியறிதலைத் தெரிவித்துத் தம் சொற்பொழிவை முடித்தருளினர்.

பின்பு அடியேன், "யந்மநீஷிபதாம்போஜரஜ : கணபவித்ரிதம், தத்தேவ பவநம், நோசேத் பகாரஸ் தத்ர லுப்யதே" (=ஞானுநுஷ்டானங்கள் நிறைந்த பெரியோர்களின் திருவடித் தாமரைகளின் சிறுதுகள்பட்ட இடமே பவனமாகும், இல்லையேல் பவனமென்னும் சொல்லை விட்டுப் பகரம் நீங்க, அவ்விடம் வனமேயாகும்) என்ற ச்லோகரத்நத்தின்படி; ஸ்ரீ சிறிய ஜீயர்ஸ்வாமி இது வரையில் வனமென்று தாம் நினைத்திருந்த தமது மடத்தை. ஸ்ரீஸ்வாமியை எழுந்தருளச் செய்து பவனமாக்கி மிகவும் மகிழ்ந்திருக்கக்

கண்டு, ஸ்ரீஜீயர்ஸ்வாமிக்கு ப்ரதிநிதியாக, அஷ்டதிக்கஜாசார்யர்களில் ஒருவரான ஸ்ரீ ஜீயர்ஸ்வாமியினுடைய மடத்தின் சிலாசாஸநத் திறப்பு விழாவினைச் சிறப்புற நடத்த, அஷ்டதிக்கஜாசார்யர்களில் ஒருவரான ப்ரதிவாதி பயங்கரம் அண்ணன் வழித்தோன்றலான ஸ்ரீஸ்வாமியே தகுந்தவரென்று கூறி, ஸ்ரீகாஞ்சீஸ்வாமி தம்முடைய திருமேனித் தளர்ச்சியையும் பொருட்படுத்தாமல் எழுந்தருளி விழாவினைச் சிறப்பித்ததற்கு க்ருதஜ்ஞதையை விண்ணப்பித்து, ஸபையை அலங்கரித்த மற்ற பெரியோர் திறத்திலும் நன்றி தெரிவித்து ஸத்தை பெற்றேன்.

ஸ்ரீஜீயர் ஸ்வாமி தமது ஔதார்யத்திற்குத் தக்கவாறு ஸ்ரீகாஞ்சீஸ்வாமியை—நல்ல சால்வையொன்றினைப் போர்த்தி விசேஷ ஸம்பாவனை செய்து கௌரவித்தருள, கோஷ்டிக்குத் தாம்பூல பலவிநியோகமாகி ஸபை இனிதே முடிவுற்றது.

மாலை 6 மணியளவில் ஸ்ரீகோவிந்தராஜப் பெருமாள் ஸர்வாபரண பூஷிதராய் சேஷவாகனத்தில் புறப்பட்டெழுந்தருள, ஸ்ரீகாஞ்சீ ஸ்வாமி அப்பெருமாளை மங்களாசாஸனம் செய்தருளி, ஸ்ரீஜீயர்ஸ்வாமியிடம் விடை பெற்று ஸ்ரீகாஞ்சிக்குத் திரும்பியருளினார்.

திருப்பதி
3-2-79

இங்ஙனம்
தி. அ. க்ருஷ்ணதாஸன்

இஞ்சிமேட்டு ஸ்ரீமதழகிய சிங்கரின் சதாப்திபூர்த்தி மஹோத்ஸவ நிகழ்ச்சி

அனக்காவூர் A. T. துரைஸ்வாமிதாஸன்

ஸ்ரீமதஹோபில மடத்தில் 42-பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ ஸ்ரீரங்கசடகோபயதீந்த்ர மஹாதேசிகனின் நூறுவது திருநக்ஷத்ர பூர்த்தி மஹோத்ஸவம் 19—1—79 மதுராந்தகத்தில் உபக்ரமித்து பத்துநாட்கள் விசேஷமாக நடைபெற்றது. ஸ்ரீமதழகியசிங்கரின் நூறுவது திருநக்ஷத்ர ஜ்ஞாபகார்த்தமாக மதுராந்தக ஸம்ஸ்க்ருத கலாசாலையை விச்வ வித்யாலயமாக விரிவுபடுத்த இதாநீ ஸ்ரீமதழகியசிங்கர் திருவுள்ளம் பற்றியாயிற்று. அதற்காக பம்பாயில் வாழ்ந்துவரும் பெருவள்ளல் ஸ்ரீ ஆர் ராமாநுஜ ஐயங்கார் ஸ்வாமி அவருடைய தகப்பனார் ஸ்ரீரங்கஸ்வாமிஐயங்கார் ட்ரஸ்டிலிருந்து பத்து லக்ஷ ரூபாய் செலவு செய்து பெரிய கட்டிடத்தை நிர்மாணித்துக் கொடுத்திருக்கிறார். அக்கட்டிடத்தை இதாநீ ஸ்ரீமதழகிய சிங்கர் ஹஸ்த நக்ஷத்ரத்தில் திறந்து வைத்து மாலோல வித்வத் ஸதஸ்ஸை

உபக்ரமித்தாயிற்று. அப்பொழுது இஞ்சிமேட்டு ஸ்ரீமதழகியசிங்கர் பாடசாலையையும், ஸதஸ்ஸையும் உபக்ரமித்ததின் நோக்கத்தைச் சொல்லி சுபேந மநஸாத்யாதம் என்கிறபடி நல்ல திருவுள்ளத்ததால் ஆரம்பித்தால் இவைகள் மேன்மேலும் வ்ருத்தியடைந்து வருவதை நாம் பார்க்கிறோம். ஸ்ரீ அழகிய சிங்கரின் திருவுள்ளத்திற்கு உகப்பான ஸ்ரீபாஷ்ய விசாரத்தை செய்வோம். அதுதான் அம்மஹானுக்கு நாம் செய்யும் கைங்கர்யமாகும் என்றருளிச் செய்து ஸதஸ்ஸை உபக்ரமித்து வைத்தாயிற்று. காலை மாலை இரண்டு வேளைகளிலும் ஸ்ரீபாஷ்யத்தில் வாக்யார்த்தம் நடைபெற்றன. வழக்கப்படி ஸ்ரீமதழகியசிங்கர் அநிதரஸாதாரண ரீதியில் கேள்விகளைக் கேட்டு வித்வான்களை ஸந்தோஷிக்கச் செய்தாயிற்று. தென்னிந்தியாவில் உள்ள ப்ரபல வித்வான்கள் எல்லோரும் ஸதஸ்ஸிற்கு வந்திருந்தார்கள். வித்வான்களுக்கும் வேத ப்ரபந்த அத்யாபகர்களுக்கும் நூறு ரூபாய் ஸம்பாவனையும் மார்க்கச் செலவையும் கொடுத்தாயிற்று. திருநக்ஷத்திரத்தன்று ஐயாயிரம் பேர்களுக்கு மேல் வந்திருந்தார்கள். சாற்றுமுறை நன்கு நடைபெற்றது. ஸதஸ்ஸிற்கு வேண்டிய த்ரவ்யம் பூராவையு பம்பாய் வள்ளல் ஸமர்ப்பித்தார்.

தேவப்பெருமாள் திருவருள்

இப்பெயர் பூண்ட வொரு நூல் சமீபகாலத்தில் வெளிவந்துள்ளது; அந்நூலின் பிரமேயம் இன்னதென்று தெரிவதற்காக அதிலுள்ள முன்னுரையை இதன் கீழே வெளியிடுகிறோம்.

முகவுரை வருமாறு

'தேவப்பெருமாள் திருவருள்' என்னுமிந்நூல் இப்போதாகப் புதிதாய் எழுதப்பட்டதன்று. பல வாண்டுகட்கு முன்பு ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதி பயங்கரம் ஸ்வாமியால் எழுதி வெளியிடப்பட்ட பல கட்டுரைகளின் தொகுப்பாக இப்போது மறுபதிப்பு செய்யப்பட்டது. ஸ்ரீ ஸ்வாமியின் பல நூற்றுக் கணக்கான நூல்களில் சில வருஷகாலமாய் கிடைப்பதற்கு அருமையாகியுள்ள நூல்களையெல்லாம் மறுபதிப்புச் செய்ய, சென்னை, மதுரை' திருச்சி, திருநெல்வேலி முதலானவிடங்களில் பல வைதிக லௌகிகத் தலைவர்கள் கூடிச் சபைகள் ஏற்படுத்தியிருப்பதால் அவற்றில் ஒரு சபையார் செய்த திருப்பணி இது.

காஞ்சீபுரம் தாதாசாரியர்களில் ஒருவரான ஸ்ரீமான். R. வரத தாதாசாரியர் என்பவர் நேற்று கார்த்திகைமாதத்தில் ஸ்ரீ தாததேசிகன் திருநக்ஷத்திரத்தன்று ஆங்கிலத்தில் தாததேசிகன் பெருமைகளைப் பற்றி ஒரு புத்தகம் வெளியிட்டதாகவும், அதில் தகுதியற்ற பல விஷயங்கள் பொறிக்கப் பட்டிருப்பதாகவும், அப்புத்தகத்திற்கு 40ரூ விலை வைத்திருப்பதாகவும் கேள்விப் படுகிறோம். 400, அல்லது 4000ரூ விலைவைத்தால் அதை ஒருவரும் கண்ணெடுத்துப் பாராமலேயிருக்கலாம் அதற்கு மறுப்பு வெளிவராமலிருப்பதற்கு இது நல்லுபாயமல்லவோ?

40ரூ விலையுள்ள அச்சுவடியில் எழுதப்பட்டுள்ள அபத்த பஞ்சாங்க புஞ்ஜங்களுக்கு, தேவப்பெருமாள் திருவருளென்னுமிந்த நூலே போதுமான தென்று திண்ணமாகச் சொல்லலாம்.

ஸ்ரீமத் பிரதிவாதிபயங்கர வம்சஸ்தர்களின் மூலபுருஷரான அண்ணன் வடகலைவகுப்பைச்சேர்ந்தவரென்பது ஷை தாதாசாரியர் சுவடியில் ஒரு அஸம்பத்தப் பேச்சு. ஸமீப காலத்தில் பிரதிவாதி பயங்கரம் ஸ்வாமியின் ஆப்தர்மூல மாக வெளிவந்திருக்கிற உத்தம வித்வன் மனோரஞ்ஜனத்தில் உத்தமூரர்க்கு இட்ட வ்யாமோஹ ப்ரசமௌஷதம் என்று வெளிவந் திருக்கும் பகுதியை வாசித்துப்பார்த்தால் நம் வரத தாதாசாரியார் பல பல வுண்மைகளை எளிதில் உணர்ந்து கொள்ளுவர்; அதனோடு கூட நேற்று மார்கழியில்வெளிவந்துள்ள சதப்ரச்ந ரத்னவளியை ஆதியோடந்தமாக வாசித்துப் பார்த்தாலும் பலவுண்மைகள் விளங்கும்.

நமது நண்பர் வரததாதாசாரியர், ஸ்ரீ தாததேசிகனையும் ஸ்ரீ வேதாந்த தேசிகனையும் வடகலையென்று மருண்டிருக்கிறார்போலும். 1909ல் எழுதி வெளிவந்துள்ள தாததேசிகனீடுபாடு சின்ன காஞ்சியில் ஒவ்வொருவர் திருமாளிகையிலுமுள்ளது. அதை மறுபடியும் வாசித்தாராகில் முந்தின மருள் தொலையும். (2) தேசிக ரஹஸ்யமொன்றில் முடிவில் "விசுத்ததேசிகவதா ரங்கதாம்நி வ்யலிக்க்யத" என்றும், பகவத்தியாநஸோபாநத்தின் முடிவில் "ரங்காஸ்தாநே ரஸிக மஹிதே ரஞ்ஜிதா சேஷசித்தே வித்வத் ஸேவாவிமலமநஸா வேங்கடேசேந" என்றும், முநிவாஹந போகத்தின் முடிவில் "நாண் பெரியோமல் லோம்நாம் நன்றுந்தீதும் நமக் ஸ்ரீ ரங்கத்தில் நாச்சியார் ஸன்னிதிக்கெதிரே தேசிகன் ஸன்னிதிவாசற் கொடுங்கையில் திகழும் காரைக் கட்டிடமான தென்கலைத் திருமண்காப்பு குறைப்பாருளரென்று நாடுவோமே" என்றும் அருளிச் செய்த நம் ஸ்வாமி தேசிகன் தாமே தமது நிலைமையைத்தெளிய வெளியிட்டருளினாராயிற்று. பிரபலமான ஸாக்ஷியல்லவா ?

காஞ்சியில் ஸ்ரீ ஜகத்குரு காதி ஸ்வாமி யெழுந்தருளியிருந்த போது (பழையதர்மஹர்த்தாக்களான) அய்யா. ரகுநாத தாதாசாரியாரும், மேல் பாக்கம் குமார தாதாசாரியாரும் தனித் தனியே சில ஸமயங்களில் வந்து வார்த்தையாடுவர்கள். ஒருநாள் இருவரும் சேர்ந்து வர நேர்ந்து விட்டது. அன்று ஸ்ரீ பெரும்பூதூர் ஸ்வாமியொருவர் ஸ்ரீ காதிஸ்வாமி ஸன்னிதிக்கு வந்திருந்தார். ஏதோ வார்த்தை யடைவில், ரகுநாத தாதாசாரியார் ஸ்ரீபெரும் பூதூரில் பழங்காலத்தில் தாம் அநுபவித்த ஒப்புயர்வற்ற ஸன்னிதி மரியாதைகளை விரிவாகச் சொல்லிக் கண்ணீர் பெருக்கினர். அப்போது உடனிருந்த குமாரதாதாசாரியார் "கீழ்க் காலங்களில் மனம்போனபடி யெல்லாம் சிலவிஷமங்களைச் செய்து விட்டு, மொட்டைச்சி கூந்தலை நினைத்துக்கொண்டு அழுவது போலே இப்போது அழு, விக்கி விக்கி யழு" என்று சொல்லிக் கொண்டே எழுந்துசென்றார். இது அறுபது வருடங் களுக்கு முந்தின செய்தி. இன்று போலுள்ள நந்தோ '...... ★

ஸ்ரீமத் பரமஹம்ஸ இஞ்சிமேட்டழகியசிங்கர்

பத்ரா திபரால் எழுதப்பட்டு சதாப்தி மலரில் வெளிவந்த கட்டுரை.

நெடு நாள் அஹோபில மடாஸ்தானத்தை அலங்கரித்திருந்து இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்பு திருநாடலங்கரித்த ஸ்ரீமத் இஞ்சிமேடு ஸ்வாமி பூர்வாச்ரமத்தில் இஞ்சிமேடு ரங்கநாதாசார்ய ஸ்வாமி என்று வ்யபதிஷ்டர். திருப்பதியில் ஸ்ரீ மத் புரிசை ஸ்ரீரங்காசார்ய ஸ்வாமிஸந்நிதியில்நெடுநாள்வாழ்ந்து சாமான்ய சாஸ்திரங்களை அதிகரித்து உபயவேதாந்த ப்ரவர்த்தந ப்ரவீணராய்க் காஞ்சியில் பல ஆண்டுகள் எழுந்தருளியிருந்தார். அடியேனுடைய கிருகத்திற்கு அதிஸமீபத்திலேயே ஒரு திருமாளிகையை ஸ்வகீயமாகக் கொண்டு குடிவாழ்ந்து வந்தார். அப்போது இருவோமுக்கும் மிக நெருங்கிய பழக்கம் ஏற்பட்டது. அநுஷ்டானத்திற்கு வெள்ளக்குளம் எழுந்தருள்வர். அடியேனுடைய கிருகத்நின் பக்கத்திலுள்ள ஸந்துவீதி வழியாகவே அந்தக் குளத்திற்குச் செல்ல வேண்டுமாதலால் இருவரும் ஒன்று சேர்ந்தே குளம் செல்வது தினப்படியான வழக்கம். திரும்புகிற ஸமயத்தில் சேர்த்தி ஏற்படுவது அரிதாகும். செல்லுகிற ஸமயத்தில் நியமேந சேர்ந்துதான் செல்வது. அப்போதைய ஸம்பாஷணைகள் ஐம்பது வருஷங்களுக்கு மேலானாலும் மறக்க முடியாதவை.

திருப்பதியில் தாம் வாழ்ந்தபோது ஸ்ரீமத் புரிசை ஸ்வாமி பக்கலிலே தாம் அநுபவித்த விசேஷங்களை ஒவ்வொரு நாள் ஒவ்வொன்றாக ஸாதித்தருள்வர். மற்றும் அநேக க்ராந்திக விஷயங்களையும் ஸாதித்தருள்வர். இடையிடையே ஸம்ப்ரதாயார்த்த சர்ச்சைகளும் நடைபெறும். கோபதாபங்கள் சிறிதுமில்லாமல் புன்முறுவலோடே ஸாதிப்பர்; தூமுறுவல் கொண்ட முகத்துடனே கேட்டருள்வர். மனச்சாக்ஷியை மீறியோ அப்ராமாணிக வழியை அவலம்பித்தோ விதண்டா வாதமாகவோ ஓரக்ஷரமும் ஸாதிக்க மாட்டார். அந்த ஸ்வாமியிடத்தில் அடியேன் விசேஷித்து அநுபவித்த குணம் இது. பெருங்கட்டூர் கண்டாவதாராசார்ய ஸ்வாமி என்றொருவர் ஸந்நிதி வீதியில் எழுந்தருளியிருந்தார், அவர் கேவல வையாகரணர். கோவில் பாடசாலையில் பல வருஷங்கள் வ்யாகரண ப்ரவசநம் செய்துகொண்டிருந்தவர். அந்த ஸ்வாமியின் இயல்வு இஞ்சிமேடு ஸ்வாமியின் இயல்வுக்கு நேர்மாறானது. விஷய சர்ச்சை என்றெடுத்தால், அது எந்த விஷயமானாலும் சரி, கோபதாபங்களில் தான் பர்யவஸித்து நிற்கும் அவர்க்கு உச்சைருத்கோஷம் பிரபலமாக இருக்கும். இஞ்சிமேடு ஸ்வாமியின் கம்பீர ப்ரக்ருதிகளை நினைதொறும் சொல்லுந்தொறும் நெஞ்சு கனிந்திருக்கும்.

அஸ்மதாசார்யரான ஸ்ரீ ஜகத்குரு ப்ரதிவாதி பயங்கரம் காதி அனந்தாசார்ய ஸ்வாமி தமது திருமாளிகையில் ஒரு ஸம்வத்ஸரம் [ப்ரஜோத்பத்தி வருஷம் என்று ஞாபகம்] ஐந்து நாள் வித்வத்ஸதஸ்ஸு நடத்தினர். அதில் இருபத்தைந்து வித்வான்கள் கூடினர். முக்கியமாக வேதாந்தார்த்தவிசாரம் செய்வதற்காகவே இந்த ஸம்மேளனம் கூட்டப்பட்டது ஸ்வாமியால். மைஸூர் ப்ராந்தத்தவரான ஸ்ரீமதுபயவே. நெக்குஹள்ளி திருமலாசாரியர் ஸ்வாமி என்கிற ஒரு மஹாவித்வான் பெரும்பாலும் தம்மோடொத்த வித்வானை ஓர் அந்தேவாஸியுடன் யாத்ருச்சிகமாக அந்த ஸதஸ்ஸுக்கு ஐந்து நாளும் எழுந்தருளியிருந்தார். (அந்த ஸ்வாமி ஸோமாசியாண்டான் திருவம்சஸ்தர் என்று ஞாபகம்.) ஸ்ரீகாதி ஸ்வாமியின் வேண்டுகோளினால் ஸ்ரீமத் இஞ்சிமேட்டு ஸ்வாமி [க்ருஹஸ்தாச்ரமஸ்தர்] ஐந்து நாளும் ஸபாபதியாக எழுந்தருளியிருந்தார். கீழே ப்ரஸ்தாவித்த நெக்குஹள்ளி ஸ்வாமி ஒரு நாள் தம்முடைய ப்ரவசநத்தில் பூர்வமீமாம்ஸா விஷயமொன்று ப்ரஸ்தாவித்தார். இஞ்சிமேட்டு ஸ்வாமி அதில் அநுபபத்தியைஆவிஷ்கரித்தார் உடனே அந்த ஸ்வாமி "இந்த விஷயம் உமக்குத்

தெரியாது. கேட்டுக்கொண்டிரும்'' என்று உத்படமாகக் கூறினர். இஞ்சிமேட்டு ஸ்வாமி உடனே எழுந்து வெளியே சென்றார். ஏதோ திருவுள்ளத்தில் சீற்றத்தினால் எழுந்தருளி விட்டதாகவே எல்லோரும் நினைத்து வருந்தினர்.

ஸ்ரீகாதிஸ்வாமியும் அப்படியே நினைத்து, ''அண்ணா! நீபோய்அவரை எழுந்தருளப்பண்ணி கொண்டுவா'' என்று அடியேனுக்கு நியமித்தருள அடியேன் புறப்பட்டுச் செல்லுகையில், ஸ்வாமி ஒரு ஸ்ரீகோசத்துடன் எதிரே எழுந்தருளுகிறார் அந்த ஸ்ரீகோசம் 'டுப்டீகா' என்கிற மீமாம்ஸா க்ரந்தம் என்று ஞாபகம். ஏறக்குறைய ஐம்பது வருஷமாய்விட்டது க்ரந்தத்தின் பெயர் வேறாகவும் இருக்கலாம். அதில் ஒரு பக்கத்தை எடுத்து அந்த நெக்குஹள்ளி வித்வான்கையில் கொடுத்து, ''இதை வாசியும்'' என்றார். அவருடைய அந்தேவாஸி உரக்க வாசித்தார். உடனே அந்த வித்வான் வேறு ஒரு வார்த்தையும் சொல்லவில்லை; ''ஜிதோஸ்மி, ஜிதோஸ்மி'' என்று இரு முறை சொல்லி நின்றார். அப்போது ஸதஸ்யர்களான வித்வான்களெல்லாரும் விஸ்மயஸ்திமிதராயினர். அந்த விஷயம் வித்வான்கள் அனைவர்க்கும் நன்கு புரியும்படி இஞ்சிமேட்டு ஸ்வாமியே விரிவாக உபந்யஸித்தார். அந்த ஸந்நிவேசம் எத்தனை வருஷமானாலும் மறக்க முடியாமலிருக்கின்றது. இது அடியேனுக்கு நித்ய ஸ்மரணத்திலுள்ள விஷயம்.

ஸ்ரீஸ்வாமிக்கு இந்த வைதுஷ்யப் பெருமை ஒரு புறம் இருக்க, ஸௌலப்ய ஸௌசீல்யாதி குணவிசேஷங்கள் வாசாமகோசரம் அடியேனுடைய வீதியிலேயே ஸமீபத்தில் எழுந்தருளியிருந்தபடியாலே ஸ்வாமியை ஸேவிக்கப்பெறாத நாள்ஒன்று கூடத் தேறாது,

ஸ்ரீஸ்வாமியின் ஜாமாதா நல்ல 'வேதாத்யயநசீலராகையாலே தினப்படியாக அவரோடு க்ரமசர்ச்சை சொல்லுவதற்கு இரவில் திருமாளிகைக்கு விடைகொள்வேன். அப்போது ஒவ்வொரு நாளும்... மேலே என்ன எழுதுவது என்று தோன்றவில்லை. திருவரங்கம் பெரிய கோயிலிலும் திருவெவ்வுளூரிலும் அடிக்கடி விடைகொண்டு ஸேவிப்பேன். ''அலமேலு ஸௌக்கியமா? கனகம் ஸௌக்கியமா?'' என்பதே முதல் குசலப்ரச்நம். 'அலமேலு' எனது திருத்தாயார் பெயர். 'கனகம்' தமக்கையின் பெயர். அவ்விருவர் பக்கலிலும் (ஆச்ரமஸ்வீகாரயான பிறகுங்கூட) ஸ்ரீஸ்வாமியின் அநுக்ரஹம் நிரவக்ரஹமாக இருந்தது.

ஸ்ரீஸ்வாமியின் ப்ரபாவாதிசயம் பன்னியுரைக்குங்கால் பாரதமாமென்று நிற்கிறேன்.

ஆழ்வார் திருநகரியில்

ஷஷ்டியப்த பூர்த்தி மஹோத்ஸவம்

ஸ்ரீ உ. வே. R. P. இராமய்யங்கார் ஸ்வாமியின் ஷஷ்ட்யப்தபூர்த்தி மஹோத்ஸவம் 26-11-78 ஞாயிற்றுக்கிழமை யன்று வெகு சிறப்பாக நல்லார் நவில் திருக்குருகூரில் நடைபெற்றது. அவ்வைபவத்தை முன்னிட்டு ஐந்து தினங்கள் திவ்ய ப்ரபந்தவேத பாராயண கோஷ்டிகளும் உபந்யாஸங்களும் நடைபெற்றன. ஸ்ரீரங்கம்ஸ்ரீ உ. வே. தி. அ. சதாபிஷேகம் கோவிந்த நரசிம்ஹாசாரியர் ஸ்வாமிகள் ''கண்ணிநுண் சிறுத்தாம்பு'' உபந்யாஸமும் ஸ்ரீ உ. வே. இளையவில்லி பூவராஹாசாரியர் ஸ்வாமிகள் ஸ்ரீராமாயண உபந்யாஸமும் நிகழ்த்தினர். ஷஷ்ட்யப்தபூர்த்தி கண்டருளும்

ஸ்வாமியின் குணபூர்த்தி பற்றி ஸ்ரீ உ வே. பூவராஹாசாரியார் ஸ்வாமிகள் கீழ்வருமாறு குறிப்பிட்டார். "அடியோங்களுடைய திருத் தகப்பனார் ஷஷ்ட்யப்தபூர்த்தி காணும் ஸ்வாமிக்கு ஆசார்யர். ஸ்வாமி அடியோங்களுக்கு மாமாவும் ஆக வேணும். அடியோங்களுக்கும் ஸ்வாமிக்கும் அதைவிட மேலான பாந்தவ்யம் : ஆசார்ய - சிஷ்ய பாவம்.

"தன்னாரியனுக்குத்தான் அடிமை செய்வது அவன் இந்நாடு தன்னில் இருக்கும் நாள் - அந்நேர் அறிந்தும் அதிலாசையின்றி ஆசார்யனைப் பிரிந்



திருப்பாரார் மனமே பேசு" என்ற ஸ்ரீ மணவாள மாமுனிகளின் நிலையே நம் ஸ்வாமியின் நிலையும். ஸ்வாமியின் இக்குணபூர்த்தியினாலேயே அடியோங் களுக்கு திருத்தகப்பனார் இல்லாத குறை தோற்றவில்லை". ஆக இங்ஙனம் ஸ்வாமியின் ஆசார்ய ப்ரதிபத்தியைச் சிறப்பித்துப் பேசி "ஸ்ரீராம பட்டாபி ஷேகத்துடன்" மஹோத்ஸவத்தை இனிதே தலைக்கட்டி வைத்தார். பல திவ்ய தேசத்திலிருந்து வந்திருந்த எம்பெருமான்களின் ப்ரஸாதங்கள் ஸ்வாமிக்கு வழங்கப்பெற்றன.

இப்படிக்கு,
ஸ்ரீசடகோபதாஸன் பொன்னப்பன்.

நைச்யாநுஸந்தானம்

நமக்கு நைச்யாநுஸந்தாநம் ஸ்வரூபம் என்றறிந்து நாம் ''நீசனேன் நிறையொன்றுமிலேன்'' என்றும் ''சீலமில்லாச் சிறியன்'' என்றும் பல வாறு பாசுரங்களை முன்னிட்டுத் தாழ்வு சொல்லிக் கொள்ளுகிறோம். நம் வாயினால் வெளிவந்த அந்தத் தாழ்வு தன்னையே பிறரொருவர் நம்மை நோக்கி எடுத்துரைக்கத் தொடங்கினால் 'என்னையா நீசனென்றாய்? என்னையா நிறையொன்று மில்லாதவனென்றாய்? என்னையா சீலமில்லாச் சிறியனென்றாய்? பாவீ! நீயன்றோ இப்படிப்பட்டவன்' என்று உடனே அவரை ஆயிரம் வகையாக தூஷிக்கவும் தண்டிக்கவும் தண்டிப்பிக்கவும் எழுகின்றோம். ஒவ்வொருவரும் தம் தம் அநுபவத்தில் இதை நிச்சயமாகக் காணலாம்.

சில விசேஷ காலங்களில் பெரியார்களை எழுந்தருளப்பண்ணி ஸ்வாமிந்! ஸ்ரீபாத தீர்த்தம் ஸாதிக்கவேணும் என்று வேண்டுகிறோம். அதற்கு அவர்கள் ஐயோ! அடியேனுக்கென்ன யோக்யதை யுண்டு? ஸகல விதத்திலும் அயோக்யனன்றோ அடியேன் என்று பலபடியாக நிகர்ஷாநுஸந்தானம் பண்ணுகிறார்கள். இந்த அநுஸந்தானம் உள்ளவாறு செய்கிறபடியா? அல்லது இங்ஙனே சொல்லிக் கொள்ள வேண்டுவது ஒரு உபசார வழக்கு என்று கொண்டு செய்கிறபடியா? என்று நாம் யோசித்தால், அவர்களுடைய ஹ்ருதயத்தை நம்மால் தெரிந்து கொள்ளமுடியாதாயினும், அவர்கள் 'தாங்கள் அநுஸந்தித்த நீசத்தன்மையை நம் வாயினால் சொல்லிக்காட்டின விடத்தும்' (அதாவது நீர் மிகவும் அயோக்கியர் என்று பிறர் சொன்ன விடத்திலும்) அவர்கள் உகந்தேயிருப்பார்களாயின் அப்போது தான் அவர்களுடைய நைச்யாநுஸந்தானத்தை நாம் ஸஹ்ருதயமென்று நினைக்கலாகும்.

'அஹம் அமர்யாத:, அஹம் க்ஷுத்ர;' என்று நைச்யாநுஸந்தானம் பண்ணுமவர்கள் ''த்வம் அமர்யாத:, த்வம் க்ஷுத்ர;'' என்கிற பரோக்தி களை உகந்திருக்கிறார்களா? என்றே நாம் பார்க்கவேண்டும். கூரத்தாழ்வான் போல்வாரான சிலரே அங்ஙனமிருந்தார்கள் என்று சொல்ல வேண்டிய தாகின்றது. தம்மைப்பற்றிப் பிறர் கூறும் நிகர்ஷோக்திகளைச் சிறிதும் ஸஹியாமல் உடனே பிரபலமாக ப்ரதி ஸத்காரம் செய்யப் புறப்படுமவர்கள் தாங்கள் செய்துக்கொள்ளும் நிகர்ஷாநுஸந்தானம் அர்த்தமற்றது என்றே சொல்லவேண்டும்.

''ஒருவன் உன்னை இடது தாடையில் அறைந்தானாகில் உடனே அவனுக்கு நீ வலது தாடையை ஆதரவோடு காட்டு'' என்று பிரஸங்க மேடைகளில் பேசுவாரை மிக மிகக் காண்கிறோம். அப்படி அவர்கள் பேசி இப்பால் வந்தவுடனே அவரை ஒருவர் அடிப்பதாகக் கையோங்கும்போதே என்ன நடக்கிறதென்பதையும் காணநின்றோம். ★